මහජන බැංකුව | மக்கள் வங்கி

PEOPLE'S BANK

# கேள்விப்பத்திர அறிவித்தல்

மக்கள் வங்கியின் தகவல் தொழில்நுட்ப புத்தாக்க நிலையத்திற்கு வளிச்சீராக்கி (எயார்கன்டிஷன்) இயந்திரங்களை 12 (பன்னிரண்டு) மாதங்களுக்கு சேவை செய்வதற்கு மற்றும் பராமரிப்பதற்கு தகுதியும் அனுபவமும் வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

| கேள்விப்பத்திர இலக்கம் | விபரம் | விலைகூறல் பிணைப்பொறுப்பு முறியின் பெறுமதி (ரூ) | கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|
| P-191/2026 | servicing andmaintenance of air-conditioning at the People's Bank IT Innovation Center for 12 (Twelve) Months. | ரூ. 100,000.00 | 02.11.2026 ஆம் திகதி பி.ப.2.00 மணி |

1. கேள்விப்பத்திர விண்ணப்பங்களை 2026.10.13ஆம் திகதி முதல் 2026.10.31ஆம் திகதி வரை வங்கி வேலை நாட்களில் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை இல: 30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் வழங்கல் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன், ஒரு கேள்விப்பத்திர விண்ணப்பப் படிவத்திற்காக **ரூ.5,000/-** மீளச் செலுத்தப்படாத கட்டணத்துடன் குறித்த நிறுவனத்தின் கோரிக்கை கடிதமொன்றையும் மக்கள் வங்கி வழங்கல் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

2. முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்களை 2026.11.02ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பிரதம முயாமையாளர், மக்கள் வங்கி வழங்கல் திணைக்களம், 30/101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இன்றேல் இந்தத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இட வேண்டும். 2026.11.02ஆம் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விப்பத்திரம் மூடப்படுவதோடு, அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். குறித்த தினத்தன்று பி.ப.2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலே மீள ஒப்படைக்கப்படும்.

3. அனைத்து அல்லது எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது கேள்விப்பத்திரத்தை இரத்துச் செய்யும் அல்லது எவ்வித காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரமொன்றின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமை மக்கள் வங்கிக்கு உண்டு. ஆகக் குறைந்த விலையை ஏற்றுக்கொள்ள வங்கி கட்டுப்பட்டிருக்கவில்லை.

4. இது தொடர்பான மேலதிக விபரங்களை பிரதம முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**பிரதம முகாமையாளர் (வழங்கல்)**
**மக்கள் வங்கி,**
**வழங்கல் திணைக்களம்,**
**30/101, கியு வீதி, கொழும்பு 02.**

**தொலைபேசி இலக்கம் : 2439577/8,**
**தொலைநகல் : 2439576**
**இணையத்தளம் : www.peoplesbank.lk**
**மின்னஞ்சல் : supplies@peoplesbank.lk**